தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள்

**ந.க.எண். 1663/ அ1/2019 நாள். 22.05.2019**

பொருள் : மெட்ரிகுலேசன் பள்ளிகள் – கல்வி நிறுவன வாகனங்கள் – பாதுகாப்பு அம்சங்கள் – அறிவுரை வழங்குதல் தொடர்பாக.

பார்வை : 1. தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் ( பள்ளி வாகனங்கள் முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சிறப்பு விதிகள், 2012.

2. அரசாணை (நிலை) எண். 270 பள்ளிக் கல்வி (எக்ஸ்2)த் துறை நாள். 22.10.2012.

3. தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 4483/ அ1/2010 நாள். 24.11.2010.

4. தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 3482/ அ1/2012 நாள். 11.09.2012.

5. தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 3778–1/ அ1/2016 நாள். 06.08.2016.

****

தனியார் கல்வி நிறுவனங்களின் வாகனங்கள் இயக்குவது சார்ந்து தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (பள்ளி வாகனங்கள் முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சிறப்பு விதிகள், 2012 வகுக்கப்பட்டுள்ளது. பார்வை–3 முதல் 5இல் உள்ள மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகளிலும் இதுசார்ந்து விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பார்வை– 2இல் உள்ள அரசாணையில் பார்வை(1)இல் காணும் மேற்படி சிறப்பு விதிகளை தவறாது பின்பற்றவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பொருளில் வாகனங்கள் இயக்குவது சார்ந்தும் மாணாக்கர் பாதுகாப்பு சார்ந்தும் அரசாலும், இவ்வியக்ககத்தாலும் தொடர்ந்து அறிவுரைகள் வழங்கப்பட்டுவரும் நிலையில் பள்ளிக் குழந்தைகள் பள்ளி வாகனத்தில் விபத்திற்குள்ளாவது நடைபெற்றுவருகிறது. இவ்வாறான விரும்பத்தகாத சம்பவங்கள் தவிர்க்கப்பட மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையிலும், பள்ளி நிர்வாகங்களின் கவனமின்மை காரணமாகப் பள்ளிக் குழந்தைகள் விபத்திற்குள்ளாவது ஏற்புடையதாக இல்லை.

மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளின் வாகனங்களை இயக்குவது சார்ந்து மீண்டும் கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

## பள்ளி வாகனங்கள் பதிவு

- பள்ளி வாகனம் என்பதற்கான அனுமதி (School Permit) போக்குவரத்துத்துறையால் பெறப்பட்ட வாகனங்களை மட்டுமே இயக்க வேண்டும்
- ஒவ்வொரு வாகனத்திற்கும் தரச்சான்று உரிய காலத்தில் புதுப்பிக்கப்படவேண்டும்.
- பள்ளி வாகனங்களின் தரச்சான்றினை புதுப்பிப்பதோடு அல்லாமல் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவிலான குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் தரத்தினை உறுதி செய்யப்பட வேண்டும்
- ஒவ்வொரு பள்ளி வாகனமும் காப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். காப்பீடு உரிய காலத்தில் புதுப்பிக்கப்படுவதை பள்ளி நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும்.

## பள்ளி வாகனப் பராமரிப்பு

- பள்ளி வாகனத்தின் முன்னும் பின்னும் “ பள்ளி வாகனம்” என்று பெரிய எழுத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும்
- ஒப்பந்த அடிப்படையில் வாகனத்தை இயக்கினால், “ பள்ளிப் பணிக்காக மட்டும்” என்று வாகனத்தின் முன்னும் பின்னும் தெளிவாக எழுதியிருக்கவேண்டும்
- ஒவ்வொரு பள்ளி வாகனத்திலும் முதலுதவிப்பெட்டி கண்டிப்பாக வைக்கப்பட்டிருக்கவேண்டும்
- ஒவ்வொரு பள்ளி வாகனத்திலும் தீயணைப்புக் கருவி பொருத்தப்பட்டிருக்கவேண்டும். தீயணைப்புக் கருவி உரிய காலத்தில் புதுப்பிக்கப்பட வேண்டும்
- ஒவ்வொரு பள்ளி வாகனத்திலும் அந்தந்த பள்ளியின் தொலை பேசி எண் எழுதப்பட்டிருக்க வேண்டும்
- ஒவ்வொரு பள்ளி வாகனத்திலும் “பாதுகாப்பு கிரில்” (Horizontal Grills) பொருத்தப்பட்டிருக்க வேண்டும்
- மற்ற வாகனங்களிலிருந்து வேறுபாடாகத் தெரியும் வண்ணம் பள்ளி வாகனங்களுக்கு மஞ்சள் வண்ணம் பூசப்பட்டிருக்க வேண்டும்
- புத்தகப் பையினை பாதுகாப்பாக வைக்க இருக்கையின் அடியில் போதிய இடவசதி செய்யப்பட்டிருக்க வேண்டும்
- ஒவ்வொரு வாகனத்திலும் விதிகளின்படி அவசரகால வழி இருக்கவேண்டும்
- பள்ளி வாகனத்தின் ஏறும் படிக்கட்டுகளின் உயரம் விதிகளுக்கு உட்பட்டு இருக்கவேண்டும்
- ஒவ்வொரு பள்ளிவாகனத்திலும் வேகக்கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்பட்டிருக்கவேண்டும்

## வாகன ஓட்டுநர், உதவியாளர் நியமனம்

- ஒவ்வொரு பள்ளி வாகனங்களை இயக்கும் ஓட்டுநர்கள் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்று, அதில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்
- ஒவ்வொரு பள்ளி வாகனத்திற்கும் ஒரு தகுதியான உதவியாளர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். உதவியாளர் இல்லாமல் வாகனத்தினை இயக்கக் கூடாது
- ஒவ்வொரு பள்ளி வாகனத்திலும் ஆசிரியர் நிலையில் ஒருவர் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் இருக்கவேண்டும்
- வாகனத்தை ஓட்டும் ஓட்டுநரின் உரிமத்தினைப் பள்ளி நிர்வாகங்கள் அவ்வப்போது சரிபார்த்து அவை காலாவதியாவதற்கு முன்பே அவற்றைப் புதுப்பிக்க அறிவுறுத்தவேண்டும்

## வாகன ஆய்வுக் குழு

- பள்ளி வாகனம் இயக்கும் ஒவ்வொரு பள்ளியிலும் "பள்ளி அளவிலான போக்குவரத்துக் குழு" ( School Level Transport Committee) அமைக்கப்பட்டிருக்கவேண்டும் ( சிறப்பு விதி எண். 10)
- அக்குழு மாதம் ஒருமுறை கூட்டப்பட்டு குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்து உறுதிசெய்யப்பட வேண்டும்
- வாகன ஓட்டுநர்களை பள்ளி அளவிலான போக்குவரத்துக் குழுவின் முன் வாகனத்தை ஓட்டச்செய்து அவர்களது திறமை சோதிக்கப்பட வேண்டும்
- மாவட்ட அளவில் துறைகளுக்கிடையேயான குழு (District Level Inter-Departmental Committee) அமைக்கப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட வேண்டும் ( சிறப்பு விதி எண். 11)

## பொதுவான அறிவுரைகள்

- எந்தவொரு பள்ளி வாகனத்திலும் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேல் பள்ளிக் குழந்தைகளை ஏற்றக் கூடாது.
- பள்ளி வாகனத்திற்குக் குழந்தைகள் ஏற வரும்போதும், பள்ளி வாகனத்திலிருந்து குழந்தைகள் இறங்கிச் செல்லும் போதும் வாகனத்திற்கு அருகில் குழந்தைகள் எவரும் இல்லை என்பதை உறுதிசெய்த பின்னரே வாகனம் இயக்கப்பட வேண்டும்.

- பள்ளி வாகனத்திலிருந்து குழந்தைகளை அவர்களது இருப்பிடத்தில் இறக்கிவிடும்போது பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் குழந்தைகளை ஒப்படைத்த பின்னரே அங்கிருந்து வாகனத்தை இயக்கவேண்டும்
- பள்ளி வாகனத்தில் குழந்தைகள் ஏற்றப்பட்டபின்னர் கதவு மூடப்பட்டு அவர்கள் இருக்கையில் அமர்ந்த பின்னர்தான் வாகனத்தை இயக்கவேண்டும்

## பள்ளி நிர்வாகிகளுக்கான சிறப்பு அறிவுரைகள்

- பள்ளிக் குழந்தைகளை ஏற்றிக்கொண்டு வாகனங்கள் பள்ளி வளாகத்திற்கு வரும்போது கண்டிப்பாக குறைந்தபட்சம் இரண்டு பள்ளி பணியாளர்கள் இருந்து அனைத்துக் குழந்தைகளையும் மிகவும் பாதுகாப்பாக இறக்கி வரிசையாக வகுப்பறைக்குள் அனுப்பவேண்டும். குழந்தைகள் வகுப்பறைக்குள் சென்ற பின்பே பள்ளி வாகனத்தை அவ்விடத்திலிருந்து நகர அனுமதிக்க வேண்டும்.
- பள்ளி வேலை நேரம் முடிந்து குழந்தைகளை வாகனத்தில் வீட்டிற்கு ஏற்றிச் செல்லும்போதும் குறைந்தபட்சம் இரண்டு பணியாளர்கள் இருந்து பாதுகாப்பாக அனைத்து குழந்தைகளையும் வாகனத்தில் ஏற்றி அனுப்ப வேண்டும்
- பள்ளி வளாகத்தில் வாகனம் இயக்கப்படும்போது அருகில் குழந்தைகள் எவரும் இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்
- வாகனங்கள் பள்ளி வாளாகத்திற்குள் வரும்போதும், பள்ளி வளாகத்தைவிட்டு வெளியே செல்லும்போதும் தொடர்ச்சியாகச் செல்லாமல் குறிப்பிட்ட இடைவெளிவிட்டுச் செல்வதை உறுதிசெய்ய வேண்டும்
- எக்காரணம் கொண்டும் பள்ளியை ஒட்டியுள்ள சாலை, மாநில நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலை ஆகியவற்றில் வாகனங்களை நிறுத்திக் குழந்தைகளை ஏற்றவோ, இறக்கவோ கூடாது
- பள்ளிக்கு வருகை தந்த ஒவ்வொரு குழந்தையும் பாதுகாப்பாக அவரவர் வீட்டிற்குச் சென்றடைவதை உறுதி செய்வது பள்ளி நிர்வாகத்தின் தலையாய கடமை என்பதால், இதிலிருந்து வழுவி கவனமின்மை காரணமாக ஏதேனும் விபத்து ஏற்பட்டால், அதற்கு பள்ளி நிர்வாகமே முழுப்பொறுப்பேற்க நேரிடும்.

## பெற்றோர்/ பாதுகாவலர்களுக்கான அறிவுரைகள்

- குழந்தைகளை பள்ளி வாகனத்தில் பள்ளிக்கு அனுப்பும் பெற்றோர்/ பாதுகாவலர், அவர்களுடன் வந்து வாகனத்தில் ஏற்றி அமரவைத்துவிட்டு வாகனம் இயக்கப்பட்ட பின்னர் அந்த இடத்தினைவிட்டுச் செல்ல வேண்டும்
- பள்ளியிலிருந்து குழந்தைகள் வரும் நேரத்திற்கு முன்பாகவே உரிய நிறுத்தத்திற்கு வந்து குழந்தைகள் வாகனத்திலிருந்து இறங்கும்போது அவர்களது கையைப் பிடித்து இறக்கி வாகனத்தை விட்டுப் பாதுகாப்பான தொலைவில் நிறுத்திக்கொள்ளவேண்டும்.
- வாகன ஓட்டுநர்கள் சரியான முறையில் வாகனத்தை இயக்குகிறார்களா என்பதைக் கண்காணித்து பள்ளி நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும்
- வாகனத்தில் உதவியாளர் உடன் வருகிறார்களா என்பதை உறுதிசெய்து அவ்வாறு உதவியாளர் நியமிக்கப்படவில்லை எனில் அதுகுறித்து போக்குவரத்துத் துறை அலுவலர்களுக்கும் கல்வித் துறை அலுவலர்களுக்கும் புகார் அளிக்க வேண்டும்
- பள்ளி நிர்வாகங்கள் வாகனங்களை இயக்கினாலும் அவற்றை முறையாகக் கண்காணிக்கும் வாய்ப்பு பெற்றவர்கள் பெற்றோர்கள் என்பதால், பள்ளி வாகனங்கள் பாதுகாப்பாக இயக்கப்படுவதை கண்காணித்து உறுதிசெய்ய வேண்டும்.

பெற்றோர்களுக்கு உண்டான அறிவுரைகளை பள்ளியில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் தவறாது பெற்றோர்களுக்கு பள்ளி நிர்வாகங்கள் தெரிவித்து அதற்கான அறிக்கையினை முதன்மை கல்வி அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இச்செயல்முறையினை அனைத்து மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுப்பி அவர்களின் ஒப்புதலைப் பெற்று கோப்பில்பராமரிக்க வேண்டும்.

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்

பெறுநர்

அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர் பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்குப் பணிந்தனுப்பப்பலாகிறது.
2. ஆணையர், போக்குவரத்து துறை, சென்னை அவர்களுக்குப் பணிந்தனுப்பப்பலாகிறது.
3. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கனிவுடன் அனுப்பப்பலாகிறது